**செய்தி வெளியீடு எண்: 555** **நாள்:29.08.2019**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், வெளிநாடுகளிலிருந்து புதிய தொழில்நுட்பங்களை அறிந்து, அவற்றை தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், வெளிநாடுவாழ் தமிழர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் முதலீடுகளைப் ஈர்த்திடவும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்கு 28.8.2019 முதல் 10.9.2019 வரை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அதன்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று (28.8.2019) காலை சென்னையிலிருந்து புறப்பட்டு நேற்று மாலை லண்டன் சென்றடைந்தார்கள்.

இன்று (29.8.2019) காலை, லண்டன் மாநகரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பணி மேம்பாடுகளைக் கண்டறிந்து, அதனை தமிழ்நாட்டில் செயல்படுத்துகின்ற வகையில், தமிழ்நாடு அரசிற்கும், International Skills Development Corporation நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை, இந்தியாவிலேயே மிகச் சிறப்பான ஆம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் தற்போது 942 ஆம்புலன்ஸ் வசதிகள், நாள் ஒன்றுக்கு சராசரியாக 3,300 அவசர விபத்து சேவைகளை கையாளுகின்றன. இந்த 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவையை மேலும் செம்மையாக்கும் நோக்கிலும், லண்டன் ஆம்புலன்ஸ் சேவையின் சிறப்பு அம்சங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்பினை மேலும் குறைத்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று லண்டன் ஆம்புலன்ஸ் சேவை மையத்திற்கு நேரில் சென்று, லண்டனில் ஆம்புலன்ஸ் இயக்கம் பற்றியும், விபத்துக்கள் பற்றி தகவல் தெரிவிக்க பயன்படுத்தும் கால் சென்டரின் இயக்கம் பற்றியும், அதன் செயல்பாடுகளையும் பார்வையிட்டு, கேட்டறிந்தார்கள்.

தமிழ்நாடு, தொற்று மற்றும் தொற்றா நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் ஆகியவற்றில் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் மூலம் மாநிலத்தில் ஏற்படும் தொற்று நோய்களின் நிலைமை குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இத்திட்டத்தை தமிழ்நாட்டில் மேலும் செம்மையாக செயல்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு, தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட்டு வரும் லண்டனின் பழமை வாய்ந்த லண்டன் ஸ்கூல் ஆப் ஹைஜீன் மற்றும் டிராபிகல் மெடிசன் (London School of Hygiene and Tropical Medicine) நிறுவனத்துடன், டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்தும் கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் அந்நோய்களை கையாளும் வழிமுறைகள் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில், நோக்க அறிக்கை (Statement of Intent) கையெழுத்தானது. லண்டன் ஸ்கூல் ஆப் ஹைஜீன் மற்றும் டிராபிகல் மெடிசன் இணை இயக்குநர் பேராசிரியர், திரு.சியான் கிளார்க், பேராசிரியர் திரு.அலிசன் கிரான்ட் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும், லண்டனில் உள்ள கிங்ஸ் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் கிங்ஸ் மருத்துவமனையின் கிளைகளை நிறுவிட, தமிழ்நாடு அரசிற்கும், கிங்ஸ் மருத்துவமனைக்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிகழ்வுகளின் போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., முதலமைச்சரின் செயலாளர்கள் டாக்டர் எம். சாய்குமார், இ.ஆ.ப., திரு. எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., மற்றும் டாக்டர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**